# குழந்தைகளுக்கான பாதுகாப்பு

## முறையீடுகள் செயலாக்கம்

TAMIL | தமிழ்

## 1 ஏன் ஒரு முறையீட்டுச் செயலாக்கம் வேண்டும்?

City of Casey, குழந்தைகளுக்குப் பாதுகாப்பானதொரு அமைப்பாகும் (Child Safe Organisation), அங்கு கவுன்சிலால் வழங்கப்படும் சேவைகள், நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் குழந்தைகள் மற்றும் இளையோர்கள் அல்லது கவுன்சிலுக்குச் சொந்தமான அல்லது நிர்வகிக்கப்படும் இடங்களில், பாதுகாப்பாக உணரவும், பாதுகாப்பாக இருக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

## 2 ஒரு முறையீடு என்றால் என்ன?

### ஒரு முறையீடு பின்வருவன பற்றி இருக்கலாம்:

- City of Casey இன் ஒரு சேவை,
- Casey ஊழியர் அல்லது மற்றொரு குழந்தை அல்லது இளையவர் நடந்து கொள்ளும் விதம், அல்லது
- ஒரு பிரச்சனை கையாளப்பட்ட விதம்.

### நீங்கள் பின்வருவனவற்றை உணர்ந்தால்:

- நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டமை, அல்லது
- City of Casey சேவை, திட்டம் அல்லது நிகழ்வில் நீங்கள் பாதுகாப்பற்றதாக உணர்ந்தால்.

**பிரச்சனை பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும் முறையீடு செய்யும் உரிமை உங்களுக்கு உண்டு.**

### குரல் எழுப்புங்கள்...

- நீங்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றால்,
- நீங்கள் காயப்படுத்தப்பட்டால்,
- நீங்கள் எவ்வாறு நடத்தப்படுகிறீர்கள் என்பதில் நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்றால்,
- கவுன்சில் சேவை, திட்டம் அல்லது நிகழ்வு பற்றி உங்களுக்குக் கரிசனைகள் இருந்தால்.

## 3 முறையீடு செய்யத் தயாராகுங்கள்

### ஆதரவுதவியைக் கண்டறியுங்கள்:

எவரையாவது நம்பும்படி கோருங்கள்; நீங்களாகவே குரல் எழுப்ப வேண்டியதில்லை.

- முறையிடுவதற்கு உங்கள் ஆதரவுதவியாளர் உங்களுக்கு உதவலாம்
- அவர்கள் பெற்றோராக, நண்பராக, பராமரிப்பாளராக, ஆசிரியராக அல்லது பயிற்சியாளராக இருக்கலாம்.

### அல்லது...

உங்களுக்குத் தெரிந்த ஒருவருடன் பேசுவது உங்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் என்றால் - குழந்தைகள் உதவி எண் போன்ற குழந்தை நட்புறவுமிக்க சேவைக்கு நீங்கள் முறையிடலாம்

### நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதைத் திட்டமிடுங்கள்:

நீங்கள் முறையீடு செய்வதற்கு முன், பின்வருவன முக்கியமானவை...

- நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதைத் திட்டமிடுங்கள்,
- உங்கள் கரிசனை பற்றிய முக்கியமான விவரங்களை எழுதுங்கள், அது எப்போது நடந்தது மற்றும் நீங்கள் பேசியவர்களின் பெயர்கள் போன்றவை.
- நீங்கள் ஏன் மகிழ்ச்சியின்றி இருக்கிறீர்கள்,
- பிரச்சனை உங்களை எவ்வாறு உணரவைத்தது, மற்றும்
- அதைத் தீர்க்க எது உதவும்.

## 4 எவ்வாறு உங்கள் முறையீட்டை மேற்கொள்வது

கவுன்சிலின் முறையீட்டு வலைப்பக்கத்திற்கான நேரடி இணைப்பிற்காக QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

### City of Casey சேவை, பணியாளர் அல்லது ஒரு பிரச்சனை கையாளப்பட்ட விதம் பற்றிய முறையீடுகள் பல வழிகளில் செய்யப்படலாம்.

- இணையவழி - **casey.vic.gov.au** ஊடான முறையீட்டுப் படிவம், வெப்சாட் அல்லது சமூக ஊடகம் வழியாக
- நேருக்கு நேர் – வாடிக்கையாளரை எதிர்கொள்ளும் இடங்களில் அல்லது நிகழ்வுகளில்
- தொலைபேசி ஊடாக – 03 9705 5200
- எழுத்து மூலமாக – மின்னஞ்சல்: caseycc@casey.vic.gov.au
- செவிப்புலன் குறைபாடுடையோர் உதவி – தேசிய இடைமாற்றுச் சேவை (National Relay Service, NRS) தொலைபேசி: 1800 555 727

மொழிபெயர்ப்புச் சேவை (Translation Service, TIS) தொலைபேசி: 131 450

**குரல் எழுப்புவது முக்கியமானது, அத்துடன் நீங்கள் முறையீடு செய்ய விரும்புகின்ற ஒருவரிடம் கூறுங்கள், அதன் மூலம் உங்கள் முறையீடு தீர்க்கப்படும்.**

**CASEY.VIC.GOV.AU**